**தங்காலை நகர சபை**

**அம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 08 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 07 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தம்பர் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3.2 மற்றும் 1.3.5 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தங்காலை நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களுடன் தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றொன்று சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், கணக்குகளைத் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கையிலுள்ள இருப்பின் பெறுமதி ரூபா 506,992 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இத்திபொகுனகொடை வடக்கு ரெதி கெதர முதலாவது குறுக்கு வீதியின் பக்கச் சுவர் நிர்மாண வேலைக்குரிய கிடைக்க வேண்டிய அல்லது செலுத்த வேண்டிய மீதியொன்றோ இல்லாமல் இருந்த போதிலும், ரூபா 238,457 வீதம் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

#### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

நீண்டகாலமாக சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 2,109,217 தொகையான நிலுவை வாடி வீட்டு வாடகையை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

1997 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய உள்ளூராட்சி மன்ற ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 4,125,808 தொகையான பங்களிப்புத் தொகை மற்றும் ரூபா 269,568 தொகையான பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி என்பவற்றை தீர்வுசெய்வதற்கு மீளாய்வாணடிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 8,401,782 கூட்டுத்தொகையான நானாவித வைப்புக்கள் தொடர்பான அட்டவணைகளும், ரூபா 3,540,530 தொகையான கடன்பட்டோர் மீதிகள் பதிவழிக்கப்பட்டமை தொடர்பான கோவைகளும் ரூபா 1,125,010 தொகையான வழக்கு தொடரப்பட்ட நிலுவை வருமானம் தொடர்பான காலப்பகுப்பாய்வு மற்றும் பயன்பாட்டுப் பதிவேடுகளும் ரூபா 906,960 தொகையான நிலையான வைப்புக்கள் தொடர்பான நிலையான வைப்புச் சான்றிதழ்களும் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

2015 மே 21 ஆந் திகதிய 15/நானாவித (051) ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்காமல் அம்பாந்தோட்டை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் விளையாட்டு விழாவிற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 38,141 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,253,327 ஆக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான செலவினத்தை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 951,312 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 302,015 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டினதும் மீளாய்வாண்டினதும் மொத்த மீண்டெழும் செலவினம் மொத்த மீண்டெழும் வருமானத்தின் சதவீதமாக எடுத்த போது 98 சதவீத பெறுமதியொன்று எடுத்திருந்த போதிலும், அந்நிலைமை இனங்காணப்பட்டு செலவினங்களை குறைப்பது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய இரண்டு ஆண்டுகள் மற்றும் மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினங்களை கருத்திற் கொள்ளும் போது ஒவ்வொரு வருடமும் சபையின் மீண்டெழும் செலவினம் தொடர்ச்சியாக அதிகரிக்கும் வேகத்தில் அதிகரித்திருந்தமை தென்பட்டது.

(இ) வருமான மானியம் கிடைக்கப்பெறாத போது எந்தவொரு வகையிலும் மீண்டெழும் செலவினத்தை மேவுகை செய்வதற்கு இயலுமை கிடைக்காதென தென்பட்டது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 ஆதன வரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது காணப்பட்ட நிலுவையிலிருந்து 36 சதவீத அளவு மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததடன் ஆண்டின் இறுதியில் நிலுவை வீதவரி மற்றும் வரித்தொகை மீதி ரூபா 2,110,799 ஆக இருந்தது. நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 170(அ) இன் பிரகாரம் இந்த நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 கடை வாடகை

மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது காணப்பட்ட ரூபா 2,675,838 நிலுவை வாடகை மீதியிலிருந்து 12 சதவீத அளவிலான சிறிய பெறுமதி அறவிடப்பட்டிருந்தமையால் ஆண்டின் இறுதியில் நிலுவை மீதி ரூபா 2,552,917 ஆக இருந்தது. நிலுவை வாடகையை அறவிடுவதற்காக நகர சபைக்கட்டளைச் சட்டத்தின் 170(அ)(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 கடை அறை வரி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஜயசிங்ஹவத்த கடை அறை

(i) ஜயசிங்ஹவத்த காணியில் அமைக்கப்பட்டிருந்த 27 கடைகளில் 16 கடைகளை வாடகைக்கு வழங்குவதற்காக 2009 யூன் 25 ஆந் திகதியும் எஞ்சிய 11 கடைகளுக்காக 2011 சனவரி 06 ஆந் திகதியும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ii) உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், கட்டிடம் திறக்கப்பட்டு குறித்த தரப்பினருக்கு கடைகளை வழங்கி குத்தகையை அறவிடுவதற்கு 2016 யூன் 30 ஆந் திகதி அளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பொது வியாபாரச் சந்தையில் இருந்த கடைகள், உடைத்து அகற்றப்படும் அடிப்படையில் அதன் 15 குத்தகையாளர்களுக்கு 15 கடைகளை வழங்குவதற்கு 2009 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், பொது வியாபாரச் சந்தயில் உள்ள கடைகளை உடைத்து அகற்றுவதற்கு 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தங்காலை பஸ் நிலையத்தின் கடைகள்

தங்காலை பஸ் நிலையத்தின் மேல் மாடியில் அமைந்துள்ள 24 கடைகள் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் 2008 ஆம் ஆண்டின் போது தங்காலை நகர சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அக்கடைகள் மதிப்பீடு செய்யப்பட்டு குத்தகை வாடகையை அறவிடுவதற்கு 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

பாதுகாப்பு ஒழுங்குபடுத்தல் செயற்திட்டம் மற்றும் கழிவுப்பொருள் அப்புறப்படுத்தும் செயற்திட்டமொன்றிற்காக பாதீட்டின் மூலம் ரூபா 6,413,000 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் XIV ஆம் அத்தியாயத்தின் 12.3 ஆம் பிரிவிற்கு இணங்காமல் மாதாந்தம் நிரந்தர மாற்றிய பிரயாணப் படியொன்றைப் பெறுகின்ற மற்றும் கடமைகளுக்காக அரசினால் மோட்டார் சைக்கில் வழங்கப்பட்டிருந்த சபையின் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு கடமை நடவடிக்கைகளுக்காக சபையின் வாகனமொன்றும் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) சேவையை விட்டுச்சென்றிருந்த 15 ஊழியர்களிடமிருந்தும் மரணித்த இரண்டு ஊழியர்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 110,490 தொகையான நிலுவை கடன் மீதிகளை அறவிடுவது தொடர்பாக 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதிய FD/RFD/2015/08 பொது (i) கொண்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 4.3 (ஆ) மற்றும் (உ) ஆம் பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ள நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 பதவியணியினர் நிர்வாகம்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிக்குரிய 05 பதவிகளில் 18 பேர் மிகையாகவும் 15 பதவிகளில் 48 வெற்றிடங்கள் காணப்பட்டன. மிகையான பதவிகளை முறைப்படுத்துவதற்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த 06 செலவின விடயங்களில் ரூபா 44,012,434 கூட்டுத்தொகையான சேமிப்புக்களும் 04 வருமான விடயங்களில் அடையப்படாத ரூபா 42,543,035 தொகையான இலக்கிடப்பட்ட வருமானங்களும் சுய வருமானமீட்டல்களிலிருந்து 30 சதவீதம் மூலதன செலவினத்திற்காக ஒதுக்கீடு செய்யப்படாமை போன்ற காரணங்களினால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/ந.சு.லே. ஆம் இலக்க தென் மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு நடவடிக்கைளுக்காக உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உள்ளகக்

கணக்காய்வினைத் திட்டமிடும் போது நிதிப் பிரமாணம் 134(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினைச் செயற்படுத்தல்

2009 யூன் 09 ஆந் திகதி DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### பொருள் மெய்மையாய்வு

மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் 157 வகையான பொருட்களுக்குரிய 2,080 அலகுகளில் பற்றாக்குறையும் சபையின் தீயணைப்புப் பிரிவிற்குச் சொந்தமான 62 பொருட்களுக்குரிய 130 அலகுகளில் பற்றாக்குறையும் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அப்பற்றாக்குறைகள் தொடர்பாக எவ்வித நடைமுறையொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 தீர்வு செய்யப்படாத பொறுப்புக்கள்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு தீர்வு செய்யப்படாத மொத்தப் பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 9,225,586 ஆக இருந்தது. அதில் 5 ஆண்டு காலப்பகுதியை மிகைத்த ரூபா 3,323,249 மீதிகளும் 3 ஆண்டு காலப்பகுதியை மிகைத்த ரூபா 443,316 மீதிகளையும் உள்ளடக்கியிருந்த போதிலும், இக்கடன் மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.6 தீர்வு செய்யப்படாதுள்ள கணக்காய்வு ஐயவினாக்கள்

2012 மற்றும் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தங்காலை நகர சபையின் ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிகளை மிகைத்து மீள்நிரப்பப்பட்டிருந்த ரூபா 9,147,970 ஆன பணத்தை மீளக்கொண்டு வருவதற்கோ அல்லது எஞ்சிய சம்பள மீள்நிரப்பல்களிலிருந்து ஈடுசெய்வதற்கோ 2016 யூன் 21 ஆந் திகதியளவிலும் தென் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) சொத்தக்கள் முகாமைத்துவம்